# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 03.06.2026**
**(காணொளி காட்சி விசாரணை)**

முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-11524/A/2023**

திரு. **பக்ருதுன் அலி அகமத். கா** -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
**தலைமயாசிரியர்,**
**அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,**
**கருங்காலக்குடி,**
**மேலூர் கல்வி மாவட்டம்.** -- பொது அதிகார அமைப்பு

# ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (03.06.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் / மேல்முறையீட்டாளர் | திரு. **பக்ருதுன் அலி அகமத். கா**, ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | **பொதுத்தகவல் அலுவலர் மற்றும் தலைமயாசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கருங்காலக்குடி** ஆஜராகவில்லை.<br><br>தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 8(2)-ன்படி **பொதுத்தகவல் அலுவலர்** விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 30.01.2023 |
| **மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கருங்காலக்குடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியின்** | |

| | |
|---|---|
| **பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் நிர்வாக குழு தேர்தல் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது எனும் விவரம் உட்பட 8 இனங்களில் தனவல் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.** | |
| சட்டப் பிரிவு 6(3)-**ன் கீழ்** மனு **மாற்றம் செய்த** நாள் | 15.02.2023 |
| பொது தகவல் அலுவலரின் பதில் | ----- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 14.03.2023 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | ----- |
| பிரிவு 19(3) **இரண்டாம்** மேல்முறையீட்டு மனு நாள் | 26.06.2023 |

2. இன்றைய தின விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலா் மற்றும் மனுதாரா் மட்டுமே ஆஜரானார். அழைப்பாணையை பெற்ற பின்னரும் இன்றைய தின விசாரணைக்கு பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலரோ அல்லது அவரது சார்பாக அங்கீகாரம் பெற்ற யாருமோ ஆணையத்தின் முன் விசாரணைக்கு ஆஜராகவில்லை. இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. **எனவே, இன்றைய விசாரணையில் ஆணையம் பின்வருமாறு உத்தரவுகள் பிறப்பிக்கின்றது:-**

- ***"அழைப்பாணையை பெற்ற பின்னரும், இன்றைய தின விசாரணைக்கு பொதுத்தகவல் அலுவலர் ஆஜராகாத காரணத்தினால் இவ்வழக்கு 24.06.2026 அன்று ஒத்திவைத்து ஆணையிடப்படுகிறது.***
- ***ஆணையத்தின் இன்றைய விசாரணைக்கு ஆஜராகாமல், மனுதாரருக்கு மன உளைச்சலையும், போக்குவரத்து செலவால் ஏற்பட்ட பண விரயத்தையும் ஈடுசெய்யும் பொருட்டு, பிரிவு 19(8)(b)-ன்கீழ் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)-ஐ இழப்பீடாக மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பிலிருந்து வழங்கிவிட்டு, அதுகுறித்த அறிக்கையை ஆணையத்திற்கு வரும் 24.06.2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்கும்படி தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA-11524/A/2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலா் மற்றும்
**தலைமயாசிரியர்,**
**அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,**
**கருங்காலக்குடி.**
**மேலூர் கல்வி மாவட்டம் - 625 101**

**<u>மனுதாரர்</u>**

திரு. **பக்ருதுன் அலி அகமத்**. **கா**,
10/248, காட்டுவா இல்லம்,
பேட்டை - கருங்காலக்குடி,
மேலூர் வட்டம்,
மதுரை - 625 101.

Copy to file

KR/PA 04.06.2026